தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, ஆவணி 29, திருவள்ளுவர் ஆண்டு—2046

2015 செப்டம்பர் 15, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை”

கிடைத்த உணவைப் பலருக்கும் கொடுத்து, தானும் உண்டு, அனைத்து உயிர்களையும் காப்பாற்றுதல் நீதி நூல்கள் கூறுகின்ற அறங்கள் அனைத்திலும் மிக உயர்ந்ததாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 256, மாண்புமிகு உறுப்பினர் திரு. புத்திசந்திரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

256—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

*36027—**திரு. புத்திசந்திரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், உதகை ஒன்றியம், பாக்கியா நகர் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நீலகிரி மாவட்டம், உதகை ஒன்றியம், பாக்கியா நகரிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகள் நிறைவு செய்யப்படாததால், அப்பள்ளியைத் தற்போது உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. புத்திசந்திரன் அவர்கள்.*

திரு. புத்திசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்கிற வள்ளுவரின் குறளுக்கேற்ப, தமிழகத்திலுள்ள எல்லாத் தரப்பு மக்களுக்கும் நல்லாட்சியை வழங்கிக்கொண்டிருக்கிற, தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான நீலகிரி, உதகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாக்கியா நகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சுமார் 111 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். 6 ஆம் வகுப்பு, 7 ஆம் வகுப்பு மற்றும் 8 ஆம் வகுப்பில் 52 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அம்மாணவர்கள் 9 ஆம் வகுப்பு பயில, அப்பகுதியிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவிலிருக்கிற கட்டபெட்டு அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டியுள்ளது. இடைப்பட்ட அந்த 3 கிலோ மீட்டர் பகுதியானது அடர்ந்த தேயிலைத் தோட்டங்கள் மற்றும் மரங்கள் சூழ்ந்த பகுதியாகவும், காட்டு விலங்குகள், அதிலும் குறிப்பாக காட்டு எருமைகள் அதிகமாக நடமாடக்கூடிய பகுதியாகவும் இருக்கின்றது. எனவே, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையினை ஏற்று, பாக்கியா நகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலனைக்

2015 செப்டம்பர் 15]

கருத்திற்கொண்டு, அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எனது தொகுதிக்குட்பட்ட எமரால்டு அரசு உயர்நிலைப் பள்ளி 270 மாணவர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. அப்பள்ளியில் 10 ஆம் வகுப்பில் 60 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அம்மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக் கல்வி முடித்தவுடன், எமரால்டு பகுதியிலிருந்து சுமார் 6 கி.மீ. தூரத்திலுள்ள இத்தலார் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சென்று கல்வி பயில வேண்டிய சூழ்நிலை உள்ளது. அந்த 6 கி.மீ. பகுதி அடர்ந்த வனமாக இருக்கின்றது. வன விலங்குகளுடைய அச்சுறுத்தல் இருக்கின்றது. எனவே, அப்பள்ளி மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, அப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. புத்திசந்திரன், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. புத்திசந்திரன்: தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி போன்ற உபகரணங்களை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டம் மலைப் பகுதியாக இருப்பதால், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள், மாற்றுத் திட்டமாக, மின் விசிறிக்குப் பதிலாக, மின்காந்த அடுப்பினை அப்பகுதி மக்களுக்கு வழங்கினார்கள். அதேபோல, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நீலகிரி மாவட்டத்தில் படிக்கின்ற மாணவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்ற விலையில்லா மிதிவண்டி அவர்களுக்கு உபயோகம் இல்லாமல் இருப்பதனால், அப்பகுதி மாணவர்களின் கோரிக்கையினை ஏற்று, மாற்றுத் திட்டமாக, விலையில்லா மிதிவண்டிக்குப் பதிலாக, table, chair போன்றவற்றை வழங்க, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு, பள்ளிக்கு அருகில் 5 கிலோ மீட்டர் தொலையில் உயர்நிலைப் பள்ளி எதுவும் இருக்கக் கூடாது. தரம் உயர்த்தப்படும் பள்ளியில் 8 ஆம் வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 50 ஆக இருக்க வேண்டும். பள்ளிக்கான இட வசதி, கிராமப் பஞ்சாயத்து எனில், 3 ஏக்கரும், நகரப் பஞ்சாயத்து எனில் ஒரு ஏக்கரும் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பெயரில் இருத்தல் வேண்டும். பொது மக்களின் பங்குத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் அரசின் கணக்கில் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். நீலகிரி மாவட்டம், உதகை ஒன்றியம், பாக்கியா நகரிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு 12 சென்ட் மட்டுமே இட வசதி உள்ளது. பொது மக்களின் பங்குத் தொகையான ஒரு இலட்சம் ரூபாய் இதுவரை அரசுக் கணக்கில் செலுத்தப்படவில்லை. தற்போது 8 ஆம் வகுப்பில் 15 மாணவர்கள் மட்டுமே பயில்கின்றனர். பள்ளிக்கு 3 கி.மீ. தொலைவில் கட்டபெட்டு அரசு உயர்நிலைப் பள்ளியும், 5 கி.மீ. தொலைவில் பில்லிக்கம்பையில் உயர்நிலைப் பள்ளியும் உள்ளன. பாக்கியா நகரிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மலைப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, சில நிபந்தனைகளைத் தளர்வு செய்தாலும், இப்பள்ளியில் 12 சென்ட் மட்டுமே இடவசதி உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள், பள்ளிகளைத் தரம் உயர்த்தும் வகையில், கூடுதலான வகுப்பறைகள் கட்டுவதற்கு நிதி உதவி அளித்து வருகின்றார்கள். இப்பள்ளியில் குறைந்த அளவு இடம் மட்டுமே உள்ளதால், கூடுதல் வகுப்பறைகளும் கட்டுவதற்கு வாய்ப்பில்லை. மேலும் 8 ஆம் வகுப்பில் 15 மாணவர்கள் மட்டுமே தற்போது இருப்பதனால், மாணவர்களின் எண்ணிக்கையும் உயர்த்தப்பட வேண்டும். நிலமும் கூடுதலாகத் தேவைப்படுகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "மலைப் பிரதேசமான எங்கள் பகுதியில் மிதிவண்டிகள் பயன்படுவதில்லை" என்ற கருத்தைச் சொல்லியிருக்கின்றார். மலைப் பிரதேசமாக

இருந்தாலும்கூட, சில பகுதிகளில் மட்டுமே மிதிவண்டிகளைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை நிலவுகின்றதே தவிர, மலைப் பிரதேசங்களிலும்கூட மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றாக, 2001 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, அறிமுகப்படுத்தப்பட்ட விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் சைக்கிள்கள் வழங்கப்பட்டு, மாணவர்கள் அவற்றை நன்றாகப் பயன்படுத்தி வருகின்றனர். இதுவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்ற எந்த ஒரு குற்றச்சாட்டும் அந்தப் பகுதியிலிருந்து வரவில்லை. இது அரசின் கொள்கை முடிவாக இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மலைப் பகுதியைச் சார்ந்தவர் என்ற காரணத்தினால், அவர் கூறியிருக்கக்கூடிய அந்தக் கருத்து மாண்புமிகு அம்மா அவர்களது மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும். அதேபோல், எமரால்டு பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். தேவையான இட வசதி மற்றும் அரசுக்குச் செலுத்த வேண்டிய பங்குத் தொகை போன்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தால், ஆய்வு செய்து சில நிபந்தனைகளுக்கு வேண்டுமானால் விதிவிலக்கு அளித்து, அப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த மாண்புமிகு அம்மா அவர்களது மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. புத்திசந்திரன் அவர்கள்.*

திரு. புத்திசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

> *“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
> *இறைஎன்று வைக்கப் படும்.”*

என்கிற வள்ளுவனின் குறளுக்கேற்ப, தமிழகத்திலிருக்கின்ற மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகக் காத்துக்கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

[2015 செப்டம்பர் 15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன்.*

எனது கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி 32-வது வார்டு, விளாக்குறிச்சி பகுதியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்தப் பள்ளியை ஆய்வு செய்து, அந்தப் பள்ளி, அரசின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களது மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த வருடமே அந்தப் பள்ளியைத் தரமுயர்த்த பரிந்துரை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பரமத்தி வேலூர் தொகுதிக்குட்பட்ட வேலூர் நகராட்சியில் 3, 4-வது வார்டுகளில் அமைந்துள்ள நடுநிலைப் பள்ளி அரசு விதிகளுக்குட்பட்டு, அனைத்து நிபந்தனைகளும் பின்பற்றப்பட்டு, நான்கு ஆண்டுகள் ஆகின்றன. பொது மக்களின் பங்குத் தொகையான ரூ.1 இலட்சமும் அரசுக்குக் கட்டப்பட்டு தயார் நிலையில் இருக்கிறது. இவை அனைத்தும் முடிந்த பிறகும்கூட அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதிலே தாமதம் ஏற்பட்டு வருகிறது. இந்த தாமதத்தைப் போக்க வேண்டும். ஏற்கெனவே, அந்தப் பள்ளியில் 65 மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்கள் அந்தப் பள்ளியிலிருந்து உயர்நிலைப்*

பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால் அந்தப் நகராட்சியில் போக்குவரத்திற்கு இடையூறான பாதையில் அந்த மாணவர்கள் பயணிக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் நான்குவழிச் சாலையைக் கடந்து செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நிலையை உணர்ந்து, குப்பிச்சிப்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தருவார்களா எனத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேலூர் நகராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்றால், 8 ஆம் வகுப்பில் படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 50 ஆக இருக்க வேண்டும். அந்தப் பகுதி நகராட்சிப் பகுதியாக இருப்பதனால், ஓர் ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். இவை அனைத்தும் இருக்கும்பட்சத்திலே அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தரமுயர்த்துவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 257, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

257—

மண்பாண்டத் தொழிற்கூடம்

***41358—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதியில் மண்பாண்டத் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?